கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10(1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன, என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டுக்கோவைகள்,

பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டின் போது வாகன திருத்தத்திற்காக ஏழு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவீனம் ரூபா 2,220,443 மூலதனச் செலவீனமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இவைகள் அடுத்த நிதியாண்டில் சொத்தாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	மீண்டெழும் செலவீனங்கள் ஆண்டிற்கான செலவுகளாக காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் நன்கொடை அடிப்படையில் பெறப்பட்ட கணினி உபகரணங்கள் மற்றும் 88 எண்ணிக்கையான புத்தகங்களின் பெறுமதிகள் சொத்துக்களாக காட்டப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் அடுத்த நிதியாண்டில் சொத்துக்களாக காட்டப்படும்.	நன்கொடை சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட 60 எண்ணிக்கையிலான சொத்துக்களின் பெறுமதிகளும், அழிப்பு செய்யப்பட்ட 14 எண்ணிக்கையிலான சொத்துக்களின் பெறுமதிகளும் உரிய சொத்துக்களின் கிரயங்களிலிருந்து கழித்துக்காட்டப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளில் நிலையான சொத்துக்கள் இல்லை என்ற காரணத்தினால் கிரயங்களிலிருந்து கழித்துக்காட்டப்பட வில்லை.	சொத்துக்களின் சேர்ப்பனவு மற்றும் கழிப்பனவு கணக்குகளில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 155,985,077 ஆன 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஆவணங்களை பெறுவதற்கும், பதிவேடுகளை முறையாக பேணுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சொத்துக்களின் ஆவணங்களைத் திரட்டி ஏடுகளில் பதிவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
(i)	24 (1) பிரிவு	சபையினால் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற 837 வீதிகளில் 138 எண்ணிக்கையான வீதிகள் அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	சுட்டிக்காட்டப்பட்ட வீதிகள் அனைத்தையும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் எதிர்காலத்தில் பிரகடனப்படுத்து வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	வீதிகளை வர்த்தமானி மூலம் அடையாளப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	128 பிரிவு	சபைக்கு சொந்தமான 286 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட 129 எண்ணிக்கையிலான காணிகளின் உரிமையினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	காணிகளின் ஆவணங்களினை அடையாளங்கண்டு, அவற்றின் உரிமையினை சுவிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	வீதிகளை வர்த்தமானி மூலம் அடையாளப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	நிதிப்பிரமாணம் 371(5)	2018 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டிருந்த புனானை கிழக்கு கடைத்தொகுதி ஒப்பந்த வேலைக்காக வழங்கப்பட்ட ரூபா 255,000 ஆன முற்பண தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	தற்போது முற்பணம் வழங்கப்பட்ட நபரை அடையாளம் கண்டு அதனை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	முற்பணக் கொடுப்பனவுகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 571(1), (2) & (3)	இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 650,578 ஆன காலங்கடந்த 10 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 4,696,306 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 5,855,358 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2024 பட்டியலிடப் பட்ட வருமானம்	2024 சேகரிக்கப் பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2023 பட்டியலிடப் பட்ட வருமானம்	2023 சேகரிக்கப் பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரியும் வரியும்	725,000	2,277,970	2,668,821	805,055	1,200,000	2,124,668	928,762	1,195,906
வாடகை	3,390,000	4,267,250	3,843,100	1,117,600	4,421,200	3,254,390	2,560,940	693,450
உத்தரவுப் பத்திரக் கட்டணம்	1,355,000	1,370,000	1,351,750	63,250	880,500	1,391,300	1,346,300	45,000
ஏனைய வருமானம்	1,070,000	2,110,253	2,000,253	494,000	3,800,000	1,392,677	993,727	384,000
	6,540,000	**10,025,473**	**9,863,924**	**2,479,905**	**10,301,700**	**8,163,035**	**5,829,729**	**2,318,356**

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ஜேசீபி இயந்திர வாடகை வருமானம் ரூபா 503,600 அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் குறித்த நபர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	இயந்திர வாடகை நிலுவையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	07 நபர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடை வாடகை ரூபா 150,000 மற்றும் 16 கடை குத்தகைதாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 252,750 மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் காலங்களில் குறித்த நபர்களிடமிருந்தும் மற்றும் வைப்புப்பணத்திலிருந்தும் இம்மிகுதி நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	கடை மற்றும் குத்தகை வாடகை நிலுவையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	**அனுமதிப்பத்திரக் கட்டணம்**		
	சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்களில் விளம்பரப்படுத்தல் தொடர்பாக விளம்பர அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 400,000 மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.	இனிவரும் காலங்களில் இவ் நிலுவையினை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	விளம்பர அனுமதிப்பத்திர கட்டணத்தினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	**ஏனைய வருமானம்**		
(i)	ஆற்றுமணல் விற்பனை மூலம் சனசமூக நிலையமொன்றிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 94,000 இனை 03 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த சனசமூக நிலையம் எதிர்வரும் ஆண்டில் குறித்த நிலுவையினை செலுத்தி முடிப்பதாக கூறியிருக்கின்றார்கள்.	மணல் விற்பனை வருமான நிலுவையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	சபையினால் நீர் வழங்கியமை தொடர்பில் அறவிடவேண்டிய ரூபா 805,055 நீர் கட்டண நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இனிவரும் காலங்களில் இவ் அறவீட்டை முழுமையாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	குடிநீர் கட்டண நிலுவையினை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	**நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வைகள்** மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன முறையே ரூபா 1,102,000 மற்றும் ரூபா 1,495,470 ஆகும்.	இவற்றை பெறுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.	நிலுவை வருமானத்தினை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 49(ஆ) இன் பிரகாரமும், சபையின் அதிகார எல்லைக்குள் கட்டிடத்தை அமைப்பதற்கான அனுமதியானது சபையினால் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி தொடர்பாக அலுவலகத்தில் கட்டிட விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பம், காணி உரித்தாவணம், நிலஅளவை வரைபடம், சபையினால் வழங்கப்பட்டிருக்க வேண்டிய சுவீகரிக்காத ஆவணச் சான்றிதழ் மற்றும் வீதி எல்லைக்கோட்டுச் சான்றிதழ் தொடர்பான எவ்வித ஆவணங்களும் இன்றி திருத்தப்பட்ட கட்டட வரைபடங்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டு சபையினால் கட்டிடத் தொகுதிகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.	சுட்டிக்காட்டப்பட்ட விடயத்தினை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சட்டத்தின் பிரகாரம், ஆவணத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே கட்டிட அனுமதி வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் சபையின் நிர்வாக எல்லைக்குள் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட 2,067.28 சதுரமீற்றர் விஸ்தீரணம் கொண்ட 07 வியாபார கட்டிடங்களுக்கான செய்முறைக் கட்டணமானது, பிரதேச சபைகளினால் பொதுவாக பின்பற்றப்படுகின்ற 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விதிகள் - 2021 இன் பிரகாரம், அறவிட நடவடிக்கை எடுக்கப்படாது, 2018ஆம் ஆண்டின் 02வது	சுட்டிக்காட்டப்பட்ட விடயத்தினை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சட்டத்தின் பிகாரம் நிர்மாண செய்முறைக் கட்டணத்தினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சபைக்கூட்டத்தின் தீர்மான இல. 2018/05 இன் பிரகாரமே அறிவிடப்படுகின்றது. இதன்காரணமாக, சபையானது சூரியபடல மற்றும் குளிச்சல் தடாக நிர்மாணங்களுக்கான செய்முறைக் கட்டணத்தை கடந்த 06 வருடங்களாக இழந்து வருகின்றது.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டின போது இரு வாகனங்களினையும் திருத்துவதற்கு ரூபா 1,538,043 செலவளிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்விரு வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்ட பின்னரும், இதனை பயன்படுத்த முடியாத நிலை காரணமாக சபையின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோடு, செலவளித்துள்ளமைக்கான நோக்கமும் அடையப்படவில்லை.	இரு வாகனங்களினதும் டயர்கள் தேய்வடைந்துள்ளது. டயர்களினை கொள்வனவு செய்த பிற்பாடு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 15 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சுட்டிக்காட்டப்பட்டுள்ள வாகனங்களின் உரிமைகளை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது	சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது 11 எண்ணிக்கையிலான வாகனங்களினை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களை அகற்றுவதற்கு அனுமதி அண்மையில் பெறப்பட்டுள்ளது. பழுதடைந்த நிலையில் உள்ள வாகனங்களை சபையின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	பழுதடைந்த வாகனங்களை இனங்கண்டு அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	கிழக்கு மாகாண 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதிய மாகாண நிதிச் சுற்றறிக்கை இல. PT/04(i)/2017 இன் பந்தி 05(ஆ) இன் பிரகாரம், பெறுகை நடைமுறையின் போது விடய அறிவின் தொடர்புடைய ஒரு நபரை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராக நியமிக்க வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 2,072,709 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மின்னியல் சாதன பெறுகையின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் மின்னியலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவில் மின்னியலாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழுவில் மின்னியலாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டு நெறி இல. 1.1.1 இன் பிரகாரம், அரச நிதியினைப் பயன்படுத்தி பெறுகை நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது, பெறுகை வழிகாட்டு நெறியினைப் பின்பற்ற வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பெறுகை வழிகாட்டுநெறியினைப் பின்பற்றாது ரூபா 375,500 டயர்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	பெறுகை வழகாட்டி நெறியினை பின்பற்றுவதற்கான ஆலோசணைகளும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	பெறுகை வழிகாட்டு நெறியின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையின் கட்டத்தின் கூரையில் சூரியபடல மின்சக்தி (Solar Power) நிறுவும் திட்டத்தை செயல்படுத்த ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. மேலும் சபைக்கு 6% தொடக்கம் 18% வரை வருமானம் கிடைக்கக்கூடியதாக இருந்தது. இத் திட்டத்தை சபைநிதியை பயன்படுத்தி செய்திருந்தால் சபையினால் முழு வருமானத்தையும் பெற்றிருக்கலாம்.எனினும் சபை அந்த வாய்ப்பை இழந்து விட்டது என்பதனை கணக்காய்வில் அவதானிக்க முடிந்தது	பதில் வழங்கப்படவில்லை.	சபையினதும், பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் சட்டதிட்டங்களுக்கு இணங்கவும் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட 06 ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபையின் நிதி, நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன.	இந்த ஆளணிகள் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற 02 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவேண்டிய ரூபா 211,064 10 வருடங்களுக்கு மேலாக அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது உரியவர்களிடம் இருந்து கடன்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.	சபையின் நிதி நிலைமையை பொறுத்து எதிர்வரும் காலங்களில் இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்	சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 5.3 இன் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் குறைந்த பட்சம் காலாண்டிற்கு ஒருமுறை என்றவாறு நடாத்தப்படுதல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் இரண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் மத்திரமே நடைபெற்றிருந்தது..	எதிர்வரும் காலங்களில் இக்கூட்டங்களை முறையாக நடாத்துவதற்குறிய ஒழுங்குகள் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	சுற்றறிக்கையின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடைந்து கொள்வதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டு அவை வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சபையின் நிதி நிலைமையை பொறுத்து எதிர்வரும் காலங்களில் இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம், குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளை இனங்கண்டு அவை வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.